**செய்தி வெளியீடு எண் :546** **நாள் : 23.11 .2016**

**செய்தி மக்கள் தொடர்பு துறையின் கீழ் செயல்படும் தமிழரசு அலுவலகத்தின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள் நேரில் ஆய்வு.**

தமிழரசு அச்சகத்திற்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் இருந்திட வேண்டும் என்பதன் அடிப்படையில் சென்னை, தரமணியில் புதிதாக கட்டப்பட்ட தமிழரசு அலுவலகம் மற்றும் அச்சக கட்டடம் ரூ.6.23 கோடி மதிப்பில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 29.09.2015 அன்று திறந்து வைக்கப்பட்டது.

அரசின் திட்டங்களையும்,சாதனைகளையும் மக்களுக்கு எடுத்துச் செல்லும் வகையில் தமிழரசு இதழ் மாதந்தோறும் சிறப்புடன் வெளியிடப்பட்டு வருகின்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரைத் தொகுப்புகள், சாதனைகள், வெற்றிக்கதைகள், மக்கள் நலத்திட்டங்கள், சிறப்பு வெளியீடுகள், தலைவர்கள் மற்றும் சான்றோர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய மடிப்பேடுகள் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் பிற பிரிவுகளின் ஆவணங்கள் ஆகியவை தமிழரசு அலுவலக அச்சகம் வாயிலாக வெளியிடப்பட்டு வருகின்றன. அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அச்சு ஊடகம் “தமிழரசு” ஆகும்.

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள் இன்று (23.11.2016) செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் சென்னை, தரமணியில் இயங்கிவரும் தமிழரசு அலுவலகம் மற்றும் அச்சகப்பிரிவின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்.

மேலும், தமிழரசு அச்சகத்திற்காக புதிதாக வாங்கப்பட்ட ரூ.4 கோடி மதிப்பீட்டிலான நான்கு வண்ண வெப்ஆப்செட் இயந்திரத்தினை பார்வையிட்டு அதன் செயல்பாட்டினையும் கேட்டறிந்தார்.

மேலும், அதிக அளவு சந்தாதாரர்களை சேர்க்க வேண்டும் எனவும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நூலகங்களுக்கும் தமிழரசு இதழ் அனுப்பப்பட வேண்டும் என அறிவுறுத்தினார். தமிழரசு இதழ் தமிழ்நாட்டிலுள்ள கடைகோடி மக்களுக்கும் சென்று, அதனை பொதுமக்கள் படித்து பயனடைய அனைத்துப் பணியாளர்களும் சிறப்புற பணியாற்ற வேண்டும் என அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு.இரா.வெங்கடேசன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) (பொறுப்பு) திரு.உல. இரவீந்திரன், செய்தி மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் (பத்திரிகை தொடர்பு) திரு.டி.எஸ்.சுப்பிரமணியம், செய்தி மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் (வெளியீடுகள்) திரு.சி.செல்வராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

**வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**